**எச்.எம்.ஓ.பி. எண்: 03/2025**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 16th day of April 2026

எ.ம.சா.1. அர்ச்சனா, க/பெ. மதிவாணன்,

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

திருவள்ளூரில் இருக்கும் போது நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதனால் எனது எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் என்னிடம் என்னை கேட்டு தயாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். தற்போது நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் உண்மையானது தான். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. நான் எனது நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்துள்ளேன். எனது திருமணத்தின் போது எனது பெற்றோர் அனைவரும் செய்வது போல் 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான தங்க நகைகள் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் சீர்வரிசையாக கொடுத்தார்கள். அதை நிரூபிப்பதற்கு நான் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தங்கையில் திருமணத்திற்கு நல்ல முறையில் தான் நான் சென்றேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்னரே எங்களுக்குள் பிரச்சனை இருந்தது. எங்களுக்கு குழந்தை பிறக்காததற்கு காரணம் என்னுடைய கணவர் என்று குறிப்பிட்டுள்ளது சரிதான். நாங்கள் வெவ்வேறு இடத்தில் இருந்ததும் காரணம். எனது கணவர் உடல் தகுதி குறித்து ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது தங்கை திருமணத்திற்கு அம்மா வீட்டிற்கு சென்றதில் இருந்து தற்போது வரை அங்கு தான் இருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எனது கணவர் எனது வீட்டிற்கு வந்து என்னை பார்த்தாரா என்றால் இல்லை. 2023ம் வருடம் செப்டம்பர் மாதம் எனது கணவர் எங்கள் வீட்டிற்கு வந்து என்னை வாழ அழைத்தார் என்றும் ஆனால் நானும் எனது தாயாரும் அவரை திட்டி அனுப்பிவிட்டோம் என்றால் சரியல்ல. நான் கடந்த 4 வருடங்களாக எனது கணவரை பிரிந்து எனது அம்மா வீட்டில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். பல முறை எனது கணவர் அலைபேசியில் என்னை திரும்பி வாழ அழைத்தும் நான் வர மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அவர் ஒரு முறை தான் அழைத்தார். அவ்வாறு அவர் அழைத்த போது நான் செல்லவில்லை என்றால் சரிதான். அதன் பின்னர் தான்

எனது கணவர் இந்த வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ பல முறை அலைபேசி மூலம் தொடர்ப்பு கொள்ள முயற்சி செய்தேன். ஆனால் அவர் அலைபேசியை எடுக்கவில்லை. நானும் எனது கணவரும் நீதிமன்றத்திற்கு வெளியே சேர்ந்து வாழ சமரசம் பேசினோம். அவ்வாறு சமரசம் பேசிய போது எனது கணவர் தன்னுடன் சேர்ந்து வாழ என்னை அழைத்தார் என்றால் சரிதான். நான் எனது கணவர் அழைத்தும் செல்லாமல் இருந்துவிட்டு தற்போது சேர்ந்து வாழ வேண்டும் என நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து காரணம் இல்லாமல் மனுதாரரை அலைகழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்படுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் எனது கணவருக்கும் இடையே மட்டும் தான் கருத்துவேறுபாடு உள்ளது. அவர்களுடைய பெற்றோருடன் கருத்து வேறுபாடு கிடையாது. நான் எனது மாமனார், மாமியாருடன் எனது கணவருடன் மீண்டும் சேர்ந்து வாழ வேண்டும் என பேசினேனா என்றால் இல்லை. தற்போது 4 வருடங்களாக எனது கணவரை பிரிந்து வாழும் நிலையில் அவரது வீட்டில் நடந்த நல்லது கெட்டது எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2025ம் வருடம் அக்டோபர் மாதம் எனது மாமனார் என்னை அலைபேசியில் அழைத்து பேசினார் என்றால் சரிதான். அப்போது அவர் எனது கணவரின் பாட்டி இறந்துவிட்டதாக தெரிவித்தார் என்றால் சரிதான். நான் அப்போது சென்று பார்த்தேனா என்றால் எனது தங்கைக்கு பித்தபை அறுவை சிகிச்சை நடந்ததால் செல்லவில்லை. எனது வீட்டிலும் சூழ்நிலை சரியில்லாததால் யாரும் சென்று பார்க்கவில்லை. எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழ எவ்வளவு முயற்சி செய்தாலும் நான் தான் அவருக்கு எவ்வித ஒத்துழைப்பும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு பிறவிலேயே கர்ப்பப்பை குறைபாடு இருந்ததால் தான் எனக்கு குழந்தை பிறக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எனது குறுக்கு விசாரணையில் விவரங்களை முன்னுக்கு பின் முரணாக தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் இந்து மனைவிக்குரிய கடமை எதையும் செய்யவில்லை என்றும் அதனால் மனுதாரர் உடல் அளவிலும் மனதளவிலும் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ நீதிமன்றத்திலோ அல்லது உரிய முறையிலோ ஏதேனம் முயச்சி எடுத்தேனா என்றால் இல்லை. தொலைபேசியில் மட்டும் அழைத்து பேசினேன். எனது கணவர் என்னை ஒரு முறை வீட்டில் வைத்து பூட்டி விட்டு சென்றுவிட்டார். அவர் மற்றவர்களுடன் பேச என்னை அனுமதித்ததில்லை. நான் எனது நிரூபண

வாக்குமூலத்தில் எனது கணவர் வீட்டில் உள்ளவர்கள் தூண்டுதல் பேரில் தான் அவர் செயல்பட்டதால் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் என்னை பல முறை வாழ அழைத்தும் நான் வரவில்லை என்றும் அவர் என்னை நல்ல முறையில் மருத்துவ சிகிச்சை செய்து கவனித்து கொண்ட போதும் நான் ஒரு இந்து மனைவி செய்ய கூடிய கடமை எதையும் செய்யவில்லை என்பதால் அவர் மனதளவிலும் உடல் அளவிலும் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. அதனால் நானும் மனுதாரரும் இனிமேல் சேர்ந்து வாழ எந்த காரணமோ வாய்ப்போ இல்லை என்றால் சரியல்ல. அதனால் மனுதாரர் கோரியுள்ளபடி உத்தரவு ஏற்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்

சாட்சியின் கையொப்பம்

Sd/- S. Senthilbabu,

சார்பு நீதிபதி,
போளூர்.